# 1 ஒலியியல் பயிற்சி, ஒலிகளை வேறுபடுத்தும் ஐந்து பயிற்சிகள்

**இலக்கு**

*பின்வரும் பயிற்சிகள் மாணவர்கள் அவர்களின் முதல்மொழியில் உள்ள அனைத்து முதன்மையான, தேவையான ஒலிகளையும் சரியாக ஒலிக்க வைக்க உதவுகின்றன. முதல்மொழியைப் பொறுத்து மாணவர்களுக்கு பேச்சுமொழியில் அறியாத எழுத்துமொழியில் காணப்படும் தெரியாத ஒலிகள் பற்றியே அவை நோக்குகின்றன. (அறிமுகத்தில் பகுதி 2அ பார்க்கவும்), அதே வேளையில் இப் பயிற்சி மாணவர்களின் சொற்களஞ்சியத்தைப் பெருக்கத் துணைசெய்கிறது.*

மழலையர் - தரம் 3 | 5 - 15 மணித்துளிகள்

**கருவிகள்:**
சொற்பட்டியல், சின்னக் கண்ணாடி.
படங்கள் கொண்ட தாள்கள்.

**தொடக்க அறிவுறுத்தல்கள்**

பின்வரும் பயிற்சியின் முதல் நோக்கமே முதல்மொழியில் அகரவரிசையில் குறிப்பிட்ட ஒலிகளை அறிமுகப்படுத்தலாகும் (முதலாம் வகுப்பு முடிவு, இரண்டாம் வகுப்பு தொடக்கம்). எழுத்துக்களின் வரி வடிவத்தை கற்றல் மட்டுமன்றி, ஒலிகளையும் சரியான முறையில் ஒலிக்கப் பயிற்றுவித்தல் வேண்டும். இப்பயிற்சிகள் மூலம் மழலையர்களுக்கு சில ஒலிகளை அறிமுகம் செய்து, பின்னர், பெரிய வகுப்புகளில் தொடர்ந்து வரும் ஐயங்களை திருத்த இப் பயிற்சியை பயன்படுத்தலாம்.

---

## அ) திரும்பக் கூறல் பயிற்சிகள்

- ஆசிரியர் குறிப்பிட்ட ஒலி உள்ள சொற் பட்டியலை ஏற்பாடு / மனப்பதிவு செய்திருப்பார். அவர் ஒரு மாணவனுடன், அல்லது பல மாணவர்களுடன் சேர்ந்திருந்து தெளிவாகச் சொற்களை ஒலிப்பார். பின்னர் மாணவர்கள் ஒவ்வொருவராக திரும்ப அச்சொற்களை ஒலிப்பர்.

- மாற்று வழி: ஆசிரியருக்கு மாற்றாக சரியாக ஒலிக்கக்கூடிய மூத்த மாணவர் ஒருவர் இப்பயிற்சியைக் கொண்டு நடாத்தலாம்.

---

## ஆ) சிறு கண்ணாடியுடன் பயிற்சி

- ஒலிப்பிறப்பை பற்றிய விழிப்புணர்வை ஒரு கண்ணாடியூடாக உருவாக்கலாம். முதலில் ஆசிரியர் ஒரு எழுத்தை எவ்வாறு ஒலிக்க செய்தல் வேண்டும் என்பதை செய்து காட்டுவார். எ.கா. "ம்", "ன" உருவாக்க வாயினுடைய அமைப்பு, அதன் பின்னர் மாணவர்கள் கண்ணாடியைப் பார்த்து, தாங்களும் அவ்வாறு ஒலிக்க முயற்சி செய்வர். மேல் வகுப்பு மாணவருடன் சேர்ந்து இருவராக இப்பயிற்சியை மேற்கொள்ள முடியும்.

- சில ஒலிகளுக்கு இப்பயிற்சி பொருத்தமாக அமைவதில்லை (எ.கா.: பத்து என்பதிலுள்ள "த்" ஒலியினை அல்லது பந்து என்பதிலுள்ள "ந்" ஒலியினை வேறுபடுத்திக் காட்ட முடியாது). இத்தகைய எழுத்துகளை ஒலிக்கும்போது கையில் படும் காற்றழுத்த வேறுபாட்டைக் கொண்டு பார்க்கலாம் (முதல் "த்" ஒலிக்கும்போது கூடிய, மற்றைய "ந்" ஒலிக்கும்போது குறைந்த காற்றழுத்தம் இடம்பெறும்)

---

## இ) ஒலிப்புகளை அடையாளம் கண்டு, வேறுபடுத்தும் பயிற்சிகள்

- அடையாளம் காணும் பயிற்சிகள்: ஆசிரியர் (அல்லது தன்னாட்டு மொழித்திறனுள்ள மேல் வகுப்பு மாணவர்) குறிப்பிட்ட ஒலியைக் கொண்டுள்ள அல்லது கொண்டிராத சொற்பட்டியலை வைத்திருப்பார். அவர் மாணவர்களுக்கு அச்சொற்களை உரத்து வாசிப்பார். குறிப்பிட்ட ஒலி வரும் சொற்களை மாணவர்கள் இனம்கண்டால், அவர்கள் கையை உயர்த்துவர். அவ்வொலியை அடையாளம் காணாவிட்டால் கையை உயர்த்த மாட்டாரகள்.

- வேறுபடுத்தல் பயிற்சி (எ.கா. : "ட்" / "த்", "ன்" / "ண்", "ல்" / "ள்" / "ழ்") : எழுத்துக்களை கேட்கும் போது, எந்த எழுத்தை அவர்கள் அடையாளம் கண்டார்கள் என்பதை வலது அல்லது இடது கையை உயர்த்தி அல்லது அந்த எழுத்துக் கொண்ட சிறு அட்டையை மாணவர்கள் உயர்த்திக் காட்டவேண்டும். வேறுபடுத்தப்பவேண்டிய ஒலிகளில் சில சொற்கள் ஒரு ஒலியைக் கொண்டிருக்கும்.(எ.கா. /த் / ) ஏனைய சொற்கள் மறு ஒலியைக் கொண்டிருக்கும் (எ.கா. /ட் / ).

**ஈ) படங்களுடன் பயிற்சிகள்**
(பயிற்சி இ போன்றது)

- அடையாளம் காணும் பயிற்சிகள்: பல பொருட்களின் படங்கள் உள்ள தாளை மாணவர்கள் பெறுவர். அவற்றில் குறிப்பிட்ட ஒலி இருக்கும் அல்லது இராது. அப்பொருட்களின் பெயரை ஒலிக்கும் போது எவற்றில் அக்குறிப்பிட்ட ஒலி உள்ளதோ அப்படங்களைச் சுற்றி வட்டம் இடவேண்டும், அச்சொற்களைச் சரியாக ஒலிக்க வேண்டும்.


- வேறுபடுத்தல் பயிற்சிகள்: (எ.கா.: "ட" - "த்", "ன" - "ண" "ல" - "ள" - "ழ்") : தரப்பட்ட படங்களில் ஒருபகுதி வேறுபடுத்தப்பட வேண்டிய ஒலிகளில் ஒரு ஒலியையும் (எ.கா. /ன் / ) மறுபகுதி மற்ற ஒலியையும் (எ.கா. /ண் / ) கொண்டிருக்கும்.வெவ்வேறு நிறங்களைப் பயன்படுத்தி மாணவர்கள் எப்பொருளை ஒலிக்கும் போது எவ்வெழுத்து உள்ளது என்பதை வேறுபடுத்தி அடையாளம் காணவேண்டும். (எ.கா. : "ன" - நீல நிறம், "ண" - சிவப்பு நிறம்). பின்பு மாணவர்கள் அச்சொற்களைச் சரியாக ஒலித்துக் காட்டல் வேண்டும்.

- மாற்றுவழிகள்: மாணவர்கள் வட்டமாக அமர்வர். அவர்கள் நடுவில் தரையிலே இரு தாள்கள் இருக்கும். ஒவ்வொரு தாளிலும் ஒவ்வோர் ஒலிக்குரிய எழுத்து எழுதப்பட்டிருக்கும் (எ.கா. :"ர்", "ற்"). ஒவ்வொரு மாணவனின் / மாணவியின் கையிலும் 5-7 படங்கள் உள்ளன. ஒவ்வொருவராக தம் கையிலுள்ள படங்களில் ஒன்றைக் காட்ட வேண்டும். அப்படத்தில் அவ்வொலிகளில் ஒன்று இருப்பின் அதனை குறிப்பிட்ட தாளில் உள்ள எழுத்தில் வைப்பர். குறிப்பிட்ட ஒலி வராவிட்டால், அப்படத்தை வெற்றிடத்தில் வைப்பர். (பட அட்டைகளை வாங்கலாம் அல்லது மூத்த மாணவர்களின் துணையுடன் தாங்களாகவே ஆக்கலாம்).

---

**உ) முதல், இடை அல்லது இறுதி அசைகளை அடையாளப்படுத்தவும்**

- மாணவர்களுக்குக் கொடுக்கப்பட்ட தாளில் 12 பொருட்களின் படங்கள் காணப்படும். குறிப்பிட்ட ஒலி சொல்லின் தொடக்கத்திலோ, இடையிலோ, இறுதியிலோ இருக்கலாம். ஒவ்வொரு படங்களிற்கு கீழே 3 பெட்டிகள் உள்ளன (கீழே எடுத்துக்காட்டை பார்க்கவும்) எனவே பொருட்களைக் குறிக்கும் சொற்களில் குறிப்பிட்ட ஒலி முதல், இடை அல்லது இறுதி அசையில் உள்ளது என்பதை அடையாளம் கண்டு குறியிட வேண்டும்.

<table>
<tr><td colspan="9">"ம்" ஒலி எங்கே?</td></tr>
<tr><td colspan="3"></td><td colspan="3"></td><td colspan="3"></td></tr>
<tr><td></td><td></td><td></td><td></td><td></td><td></td><td></td><td></td><td></td></tr>
</table>

I